   

# ஸ்ரீவித்யையின் புத்திரன்

எத்துனை புண்ணியம் செய்தனனோ...
ஸ்ரீவித்யையின் புத்திரனைக் கண்டேனே
எத்தனை ஜென்மங்கள் கழிந்தனவோ
இன்று வரை யான் அறியேனே...

தாயே உன்னையே சரணைடைந்தேன்
நீயே அனைத்தும் என்றுணர்ந்தேன்
என் நெஞ்சத்தில் உனையே வைத்தேனே
என்னை உன்னில் கலந்துவிடு....

இவ்வுலக மாயையில் ஆழாது
இந்திரிய சுகங்களில் சிக்காது
நீயே உண்மை மெய்ப்பொரு ளே
நன்றாய் நானும் உணர்ந்தேனே...

உன்னை அடையும் மார்க்கத்திலே
மாயையின் பந்தத்தில் சிக்குண்டு
உபாயம் அறியாமல் நிற்கையிலே
உத்தம குருவைத் தந்தாயே...

குஹானந்தரும் சிதானந்தரும் பாலானந்தர்
சம்பகாம்பாவும் எனக்கே
அருளை வழங்கி
ப்ரஞா னானந்தராய் வந்தாரே...

குருவடி தனையே சரணடைந்தேன்
உனதடி தந்தருள் என்தாயே...
திருவடி தனையே சரணடைந்தேன்
குருவும் நீயும் வேறில்லையே... :

ஸ்ரீ குரு ப்ரஜ்ஞானானந்தநாதரின் அருளால்
அவரது ஶிஷ்யை ஸ்ரீமதி முத்து ரமா பாலாஜி இயற்றியது